6- APR 1922
MADRAS



# திருமலை நாராயண மாலை
# திருமலை கீர்த்தநாநந்த லஹரி.

உ

இஃது

காஞ்சிபுரம்,

திருவருட்பிரகாசவள்ளலார்
மரபு,

திச்சல் இராமாநந்த
சுவாமிகளவர்கள்

கா. சுவாமி
சொருபாநந்தமணி
யவர்களாலியற்றியது.

காஞ்சிபுரம் சந்திரபாநு யந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.
1922.

Q22 : 4.17
M22
175921

உ
ஓம் தத்ஸத்.
பரப்பிரஹ்மணேநம:

திருக்காளிசெட்டியக்கிராரம் திருமலைவாசன்மேற்

காஞ்சீபுரம்.

ஸ்ரீமத் நிச்சல இராமாநந்த சுவாமிகளவர்கள்
இயற்றியருளிய,

# திருமலை நாராயண மாலை.

ஷை சுவாமிகளின் பாதசேகரர்களிலொருவராகிய,
காஞ்சீபுரம்,

சுவாமி சொருபாநந்தமணியவர்களாலியற்றிய

# கீர்த்தனாநந்த லஹரி.

இஃது,
சுவாமி சொருபாநந்தமணியவர்களாற்
பரிசோதிக்கப்பட்டு,
சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூக்கா காளிசெட்டி யக்கிராமம்,
பூசாரி மாதுஸ்ரீ பார்வதியம்மாளவர்கள்
பொருளுதவியின்பேரில்,

ஸ்ரீமத் கா. நிச்சல இராமாநந்த சுவாமிகளின் பாதசேகராகிய,
ஸ்ரீமத் சின்மயாநந்த சுவாமிகளின் பாதசேகரர்

ஸ்ரீமத் முத்தாநந்த சுவாமிகளவர்களாற்,

காஞ்சீபுரம்,
சந்திரபாநு அச்சுயந்திர சாலையிற்,
பதிப்பிக்கப்பட்டது.

காபி 500. 1922. இதன் விலை அணா 4.

உ

ஓம் தத்ஸத்.

# திருமலை நாராயணமாலை.

## காப்பு.

சீருலவு வசிஷ்டநதி தீரந் தன்னிற் றிகழ்கமுகு தெங்கு முதற் சோலைசாலை, நீருலவு வயல்கண்மலர் வாவி சூழ்ந்து நிகழ்காளி செட்டியக்கி ராரத் தின்கண், பேருலவு மிமயமலைக் கொப்பா யோங்கிப் பிறங்குதிரு மலைமுடியி லமர்ந்தே யன்பர், நேருலவு ஸ்ரீநாரா யணனைப் போற்ற நெடுந் தகையாஞ் சடகோப னிணைத்தாள் காப்பே.

## சடகோபர் துதி.

திருமருவுங் காளிசெட்டி யக்ரா ரத்தைச் சேர்ந்தகிரி முடியமர்ந் திங் குயிர்கள் செய்த, கருமவினை யகற்றுவனென் றெப்புக்கொண்ட கண் ணனிணைத் தாடுதிக்கக் கருணை யாலே,யருண்மறையின் பொருண்முடிவைத் திராவி டத்தி லளித்தகுரு பானுகுஞ் சடகோ பன்ற, ணிருமலமா நெஞ் சிருத்தித் துதிப்பா மென்று நிகழ்நாரா யணமாலை நிறையத் தானே.

## நூல்.

நீர்வளமு நிலவளமு நிறைவுற் றோங்க நெற்பயிரா தியவிளைந்து கதிர்கள் சாயக், கார்வளமுற் றனவரதம் பலனை நல்குங் காளிசெட்டி யக்கி ரார மதிலெஞ் ஞான்றுஞ், சீர்வளங்க ணிரைந்திலகுங் கிரியின் மீது திகழ் கின்ற முகுந்தவை குந்த னென்று, பேர்வளமுற் றிடர்தவிர்க்க வொப்புக் கொண்டு பிறங்கரியோ நமநாரா யணமெய்த் தேவே. (1)

கன்னலொடு தென்னைபல கமுக ரம்பைக் கசிந்துநிதந் தேன்சொ ரியுஞ் சோலை சூழ, மன்னிவளர்ந் தோங்கியொளி ரக்ரா ரத்தின் மலைமு டியிற் புற்றுருவா யமர்ந்த கோவே யுன்னைனினைந் துருகுமவர் கனவிற் றோன்றி யுங்களையான் காப்பேனென் றுறுதி கூறிச், சொன்னமொழி தப்பாம விடர்தீர்த் தாளுஞ் சுயமரியோ நமநாரா யணமெய்த் தேவே. (2)

வாசமலர் மடல்விரிய வழிதே னுண்ட மதுகரங்கள் சதுர்வேத கீதம் பாட, தாசர்மன மகிழ்ந்தனது மலர்த்தாள் சேவை தனைக்கண்டிங் கவசமுற்று நிற்க நாளும், பாசமறுத் தாளுவமென் றசல மீது பரிவுடன்வந் தமர்ந்தருளுங் கருணை வாழ்வே, நாசமிலாக் கதியளிப்பாய் நம்பி னோர்க்கு காஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (3)

அண்டர்புகழ் வசிஷ்டநதி தீரந் தன்னி லமர்காளி செட்டியக்ரா
ரத்தி லோரங்குந், தொண்டர்பழ வினையகற்ற வொப்புக் கொண்டு துலங்கு
திரு மலையமர்ந்த துரிய வாழ்வே, கண்டமிலா தகண்டவடி வான மோனக்
கற்பகமே முகில்வண்ணா கமலக் கண்ணா, தெண்டமிடு மடியர்துயர் தீர்த்
துக் காப்பாய் ஸ்ரீஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (4)

பத்தரிரு தயவாசா பரம ஞானப் பாநுவென விளங்கிபவ பந்தநீக்கு,
சித்தநிரு மலசொரூப சாட்சாத் கார நெறியருள கிரிமுடியின் மீத மர்ந்து,
மெத்திசையோ ரடிபரவ யிடர்க ளெல்லா மிமைப்போதி லகற்றுவனென்
றுருதி கூறி, முத்திநிலை மெய்யன்பர்க் குதவுந் தாயே முராஹரியோ நம
நாரா யணமெய்த் தேவே. (5)

சோதிமய மாய்விளங்குந் துரியா தீத சொரூபநினைத் தொழுமன்
பர் தமக்கி ரங்கி, யோதவொரு புற்றுருவாய் வடிவெ டுத்தே யுயிர்களிடர்
நீக்குவனென் றொப்புக் கொண்டுஞ், சாதினறு மலர்த்தடஞ்சூழ் பருவதத்
திற் றனிநடஞ்செய் தொளிர்கின்ற பெருமா னேயென், றுதிநடு வந்த
மிலா வகண்ட வாழ்வை யருளரியோ நமநாரா யணமெய்த் தேவே. (6)

அன்புருவே யாரமுதே யரசே யிந்த வண்டமெலா மூவடியி னலை
ளந்தே, துன்பகற்றி மாபலியை யாண்டு கொண்ட துரியவப ரோக்ஷம
ருள் துளப மாற்பா, வுன்புகழை யாணியம்பத் தரமோ சேட னுறைப்ப
தற்கு மரிதென்றுற் கருணை வைத்தே, யின்புதவி யன்பருட னெனையுஞ்
சேர்ப்பா யிலகரியோ நமநாரா யணமெய்த் தேவே. (7)

சிருட்டிக்க வயனாகிக் காப்ப தற்குத் திருமாலா யழித்திடருத் திர
னாய் மேலோர், பரீட்சிக்க மூவுருவு மொன்றாய் நின்ற பரம்பொருளே யட்
சரனாந் துரிய வாழ்வே, பொருட்சித்தி யடைந்தொளிரு மக்ரா ரத்தின்
பொருப்பமர்ந்த நெடுமாலே யடிய னேற்குத், தெருட்சித்தி யளித்தரு
ளாய்த் தேவர் கோவே ஸ்ரீஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (8)

மச்சகூர் மவராக நார சிங்க வாமனப்ப ரசுராம னிராம னோடு, மெச்
சுபல ராமகிட்ண கற்கி யென்ன மிளிர்கின்ற வவதாரஞ் செய்து நாளு,
மிச்சகத்தி லரக்கர்குலம் வேர றுத்தே யிமையோரைக் காத்தபடி யுங்க
ளைத்தான், நிச்சயமாய்க் காப்பனென் றொப்புக் கொண்டு நிகழரியோ நம
நாரா யணமெய்த் தேவே. (9)

மூலமென வோலமிடுங் கரிமுன் றோன்றி முதலைதனைச் சக்கரத்
தாற்சங்க ரித்து, மேலுமதன் சாபந்தீர்த் தாண்ட வண்ண மிளிர்காளி செட்
டியக்கி ராரத் தின்கண், சாலவுயர் கிரியமர்ந்தென் போல்வார் தம்மைத்
தடுத்தாளப் புற்றுருவாய்த் தழைத்த மூர்த்தி, சீலவடி யார்தமக்கிங் கருள
விப்பாய் ஸ்ரீஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (10)

மாணமுறு புகழ்ப்பிரக லாத னன்றன் மனமுருகும் பக்திதனக்
கிரங்கி முன்னாள், தூணிலுதித் திரணியனைச் சங்கரித்துத் தொண்டர்
தமைக் காத்தளித்த வண்ண மிந்த, நீணிலத்திற் புகழ்மலிநல் லக்ரா ரத்தி
னெடுங்கிரிமேற் புற்றுருவாய் நின்ற மூர்த்தி, நாணமற பத்திசெய்வா
ரிடர்க டீர்ப்பாய் நரஹரியோ நமோநாரா யணமெய்த் தேவே. (11)

தசரதன்றன் சுதனாகி மிதிலைக் கேகிச் சானகியை மணம்புரிந்த
யோத்தி வந்து, தசரதன்சொற் கடவாமல் வனத்திற் கேகித் தசக்ரீவ னுயிர்
நீக்கித் தேவர்க் குள்ள, விசனமறுத் தாண்டதும்பா லெம்மை யாள மேதி
னியிற் றிருவளரு மக்ரா ரத்தி, லசலமுடி மீதமர்ந்தாய் மேக வண்ணா வரி
ஹரியோ நமோநாரா யணமெய்த் தேவே. (12)

அரசகுலம் வேரறுப்பே னென்றெழுந்தே யகடுதனி லுள்ளபல
கருவைக் கொன்ற,பரசுதரன் செருவத்தைப் பங்கஞ் செய்து பாருலகி லிடர்
தீர்த்த கருணை வாழ்வே, பிரசமலர் நிறைதடஞ்சூ ழக்ரா ரத்திற் பிறங்கு
மலை முடியமர்ந்தெங் களையுங் காக்கத், தெரிசனந்தந் தோங்கியசெங் கமலக்
கண்ணா ஸ்ரீஹரியோ நமோநாரா யணமெய்த் தேவே. (13)

காவாயென் றிருகரங்கள் சிரமேற் கொண்ட கட்டழகி துரோபதைக்
குத் துகில ளித்து, மூவாசைப் பிணிப்பகன்ற பரம ஞான முத்தருளந்
திருநடஞ்செய் தருளுங் கோவே, சாவாத வரமளித்திங் கென்னை யாள்
வாய் சைலமுடி புற்றுருவாய்த் தழைத்த வுன்னை, தேவாதி தேவனென
மறைகள் போற்றும் ஸ்ரீஹரியோ நமோநாரா யணமெய்த் தேவே. (14)

காலனென முகிலினங்க ளொன்று கூடிக் கனமாரி சொரிந்தழிக்க
விண்ணோ னேவுங், காலமதி லொருவிரலான் மலையெடுத்துக் கனமுகி
லைத் தடுத்துபசுக் கூட்டங் காத்தாய், போலுலகிற் செழித்தோங்கு மக்ரா
ரத்தின் பொருப்பமர்ந்தே யெங்களைத்தா ளாள நின்ற, சீலவரு ளாரறிவார்
கமலக் கண்ணா ஸ்ரீஹரியோ நமோநாரா யணமெய்த் தேவே. (15)

காளிங்க மடுவருகி லேகி யேதான் கானடைகண் மேய்த்துவரும்
போதோர் நாளிற், காளிந்தி தனைமருவி யாடக் கண்டு காளிங்கன் சீற்ற
முறவவனைக் கொன்று, காளிங்க மர்த்தனப்பேர் தரித்திங் கன்பர் கருப்
புகா தாண்டபடி யக்ரா ரத்திற், காளிங்க மலைமீது நடனஞ் செய்யுங்
கனஹரியோ நமோநாரா யணமெய்த் தேவே. (16)

அகலிகைதன் சாபமதை நீக்கிமுன்போ லணங்குருவ மாக்குமடி
மகிமை தன்னைப், புகலரிதா யிருந்திடநீர் கிரியி னுச்சிப் புற்றுருவாய் நின்
றடியார்க் கெளிய னாகிப், பகலிரவுங் கனவினில்வந் திடர்தீர்த் தாள்வன்
பாரிலென்பேர் நாரணனென் றபய மீந்து, செகந்துதிக்கக் காளிசெட்டி
யக்ரா ரத்திற் றிகழரியோ நமோநாரா யணமெய்த் தேவே. (17)

தேவர்களு மிராக்கதருஞ் சேர்ந்தொன் றாகித் திகழ்தருப்பாற் கடல் கடையத் திரண்டெழுந்த, தாவுவிட மான்களத்தி லிருத்தி விண்ணோர் தமக்கமுர்த மளித்தபெருந் தகையே யென்று, மேவிவளர் காளிசெட்டி யக்கா ரத்தின் மெய்யன்பர் தமையாள வொப்புக் கொண்டு, தாவரிதாங் கிரிமுடியி லமர்ந்த கோவே தனியரியோ நமநாரா யணமெய்த் தேவே.

வேதமெலாங் கவர்ந்தெடுத்துக் கொண்டு முன்னம் விரிகடலி லொளித்திடுஞ்சோ மகனைக் கொன்று, மாதவருக் கத்யயனஞ் செய்யத் தந்த மறைமுடிவே யருளமுதே யதுபோ லிந்தப், பூதலத்திற் காளிசெட்டி யக்கா ரத்தின் பொருப்பமர்ந்த பெருமானே வாசு தேவா, சேதமற வெங் களையிங் கடிமை கொள்வாய் ஸ்ரீஹரியோ நமநாரா யணமெய்த் தேவே.

பூதலத்தைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு போயொளித்த விரணி யாக்கன் றன்னைத் தேடிப், பாதலத்திற் கண்டவனைப் பகைத்த ழித்துப் பட்சமுடன் பூமிநிலை நிறுத்கி யாண்ட, சீதரனே திருமடைந்தை நடஞ் செய் தோங்கித் திகழ்காளி செட்டியக்கி ராரத் தின்கண், ணாதரவாய்த் திகி ரியுச்சி யமர்ந்த கோவே யரிஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (20)

பூதகியின் பயோதரத்தி னிறைத்து வைத்த பொல்லாத விடமுண் டிங் கவளைக் கொன்றே, காதகியை யேவியமா துஷ்ட ஞன கஞ்சனையுங் கொன்றுலகைக் காத்த வண்ணஞ், சாதகமா யென்றனையிங் காள்வா யையா தகுகாளி செட்டியக்கி ராரத் தின்கண், பூதாமேற் கொப்புகந்த ராய னென்னப் புகழரியோ நமநாரா யணமெய்த் தேவே. (21)

பாண்டவர்க்குத் தூதுசென்றுய்ப்பரிவி னோடு பார்த்தனுக்குச் சார தியாய் ஞான மீந்தாய், வேண்டுவதெல் லாமளித்தாய் குசேலனுக்கு விருந் துண்டு விதுரனுளங் களிக்க வன்பு, பூண்டவனே காளிசெட்டி யக்கா ரத்தின் பொருட்டமர்ந்து கொப்புகந்த ராய னென்னு, மாண்டவனெம் பெருமானே வினைதீர்த் தாள்வா யரிஹரியோ நமநாரா யணமெய்த் தேவே

தொண்டருள மகலாத சொப்ர காச துரியவப ரோக்ஷவநு பவவி லாசா, வண்டர்தொழு முகில்வண்ண கமலக் கண்ண வாவிலைமேற்பள்ளி கொண்ட வாதி மூலா, தெண்டனிடு மடியரிடர் தீர்ப்பே னென்று திகழ் காளி செட்டியக்கி ராரத் தின்கண், மண்டலமெ லாம்புகழப் பொருட்டி லோங்கி வளரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (23)

செல்வமிகத் திருவிளங்க வறங்க ளோங்கச் செனித்துநனி நீர்பெ ருகி நதிகள் பாயக், கல்வியறி வுதிக்கமுத்தி கரையிற் சேர்க்கக் காளிசெட் டி யக்ாரக் குன்றிற் சேர்ந்து, தொல்வினைக ளகற்றுதுமென் றொப்புக் கொண்ட சுடர்மணியே கொப்புகந்த ராய னென்னுஞ், செல்வனினை யாறிய வல்லா ரிங்கு ஸ்ரீஹரியோ நமநாரா யணமெய்த் தேவே, (24)

இந்திரியமுட் கரணமுதல் வேறாய் நீக்கி யிருண்மலமாம் படலமதைக் கீறி நாளுங், கந்தமல ரென்னவுநின் றன்னை யென்னுட் காண்பறநான் காணாநா ளுளதோ வையா, சந்தமுறு காளிசெட்டி யக்ரா ரத்தின் சைல மதிற் கொப்புகந்த ராய னென்னுஞ், சுந்தரனே வுலகமெலாஞ் சேர்ந் தொன் றாகித் தொழுமரியோ நமநாரா யணமெய்த் தேவே. (25)

இலகுதிரி விக்கிரம வடிவம் பூண்டு யெழிலுலகை மூவடியா லளந்த வண்ண, முலகுபுகழ் காளிசெட்டி யக்ரா ரத்தி னோங்கன்முடி புற்று றுவா வெழுந்த மூர்த்தி, கலகமனச் செயலாலே யலம ருண்டு காரணநின் னடிமறந்தே னெனினு மையா, யலகிலறி வானந்தந் தந்து காப்பா யரி ஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (26)

சூர்ப்பனகி தனமூக்குத் தறித்தாய் முன்னர் துட்டகர தூடணரை வதைத்தாய்ப் பின்ன, ரேர்பலமெ லாந்திரட்டி யீந்த சௌரி யெச்சிலுண்டு மனமகிழ வாண்ட வண்ணஞ், சீர்பெருநற் காளிசெட்டி யக்ரா ரத் தின் றிகிரியின்மேற் கொப்புகந்த ராய னென்னும், பேர்பெறநின் றடி யரிடர் தீர்ப்பே னென்று பிறங்கரியோ நமநாரா யணமெய்த் தேவே. (27)

கருவிகா ணாகியற்றிங் கொற்றைக் காலிற் கடுந்தவஞ்செய் முனி வர்முதற் புறத்தி ருக்க, விறைவிலெனை யாண்டருளக் கருணை யாலே மிளிர்சோதி வடிவாகிக் கலந்தொன் றாகி, மருவிவளர் காளிசெட்டி யக்ரா ரத்தின் மலைமுடிவாழ் பெருமானே வருடந் தோறுந், திருவிழாக்கொண் டெழுந்தருளுந் தேவர் கோவே ஸ்ரீஹரியோ நமநாரா யணமெய்த் தேவே.

அளவகன்ற நெடுங்கால மனத்தால் வாக்கா லளந்தளந்திங் கறிய வொணா வமல வாழ்வே, யுளவகன்ற வென்போல்வா ருளத்த மர்ந்தே யொ ழியாத சுகமளிக்கு முறவே ஞான, விளைவுகந்த காளிசெட்டி யக்ரா ரத் தின் வெற்பமர்ந்தே கொப்புகந்த ராயா வன்பர், களவகற்றி யாண்டிடுநா ளுளதோவையா கணஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (29)

அன்பருள மாலயமாய்க் கொண்டெ னக்கே யதீதசுக மளித்த பெருங் கருணை மூர்த்தி, யுன்பெருமை யாரறிவா ரையா விந்த வுலகுபுகழ் காளிசெட்டி யக்ரா ரத்தி, லின்பநடம் புரிந்தருளாற் புற்றாய்த் தோன்றி யெழிலாருங் கொப்புகந்த ராயா பத்தர், துன்பவினை யகற்றவருள் செய் யுங்கோவே சுயம்பரியோ நமநாரா யணமெய்த் தேவே. (30)

பொன்மணிக ளலைகொழிக்கு மருவி பாயும் பொருட்டுடைய காளிசெட்டி யக்ரா ரத்தார் கன்மவினை யகற்றுதுமென் றுறுதி கூறிக் கரு ணையினாற் கொப்புகந்த ராயா வன்பர், சன்மமறச் செய்யாயே லுலக முன் னைச் சற்றேனு மதித்திடுமோ சாந்த மூர்த்தி, தன்மயமா யுயிர்களைத்தான் றடுத்தாட் கொள்ளுந் தனியரியோ நமநாரா யணமெய்த் தேவே. (31)

மோகமெனுங் கடல்கடந்தி ராகத் வேஷ முழுமூட விராக்கதரை மண்ணிற் சாய்த்துச், சோகமறச் சீதைதனை யாண்ட வண்ணஞ் சுகமருள் வாய்க் காளிசெட்டி யக்ரா ரத்தோர், பாகமுறு கிரியினுச்சி தனில மர்ந்த பரந்தாமா கொப்புகந்த ராயா வென்று, மாகமங்க டுதிக்கவளர் கரிய மாலே யரிஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (32)

வாமனனாய் மூவடிமண் டானங் கேழ்க்க மாபலியுஞ் சம்மதித்துத் தாரை வார்க்கக், காமுகனாய் நீரடைத்த சுக்கி ரன்றன் கண்போக்கி வானவரைக் காத்த வண்ணம், பூமிவளர் காளிசெட்டி யக்ரா ரத்தின் பொருப்ப மர்ந்து கொப்புகந்த ராயா நின்றன், நாமமதை நினைத்தவரின் வினைக டீர்ப்பாய் நரஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (33)

தேவகியி னகடுதனிற் சனித்தே யார்க்குந் தெரியாம லசோதையிடம் வளர்ந்து சின்னா, ளாவினங்க டமைமேய்த்துத் திருடி வெண்ணெ யருந்தியுங்கோ பிகையார்மத் தடியும் பட்டுக், காவலனா யுயிர்களையுங் காத்த வண்ணங் காளிசெட்டி யக்ராரக் கிரிய மர்ந்தா, யாவலுட னன்பர்களை யாள்வா யென்று மரிஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (34)

அரவணைமேற் பள்ளிகொள்ளு மாசே தேவர்க் கமுதமளித் திலக்குமியை யணைந்து தாய்போற், சருவசரா சரங்களையுங் காத்த வண்ணந் தடமமர்ந்து காளிசெட்டி யூரா ரன்பின் மருவுயிர மோச்சவமு நடத்தக் கொள்ளு மாதவனே சீதரனே யன்பர்க் கென்றும், வெருவகற்றி யாண்டருள்வா யெங்குந் தானாய் மிளிரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (35)

ஐவேலிக் காயதனி லரனொ ளிக்க வழகியபெண் ணுருவாகி நீயு நிற்க, ஐவேடங் கண்ட ரக்கன் விகாரங் கொள்ள வக்கணமே யவனுடலைச் சாம்ப ராக்கிப், பொய்வேட மகன்றுசிவன் றன்னை மீட்டுப் பூதலமெல் லாங்காத்த வண்ணங் காப்பாய்ச், செய்வேலைக் காளிசெட்டி யக்ரா ரத்திற் றிகழரியோ நமநாரா யணமெய்த் தேவே. (36)

குலமதிக்கப் பிறந்தும்பல நூல்கள் கற்றுங் குணமதிக்கச் சிறந்து நனி விரத மாதி, பலமதிக்கச் செய்துமுன்ற னடிய வர்க்குப் பரிவிலவர் கெதியடையா ரெனினு மையா, நிலமதிக்குங் காளிசெட்டி யக்ரா ரத்தின் நெடுங்கிரிவாழ் கொப்புகந்த ராய நின்றாள், வலமதிக்க வக்கணமே முத்தி சேர்க்க வளரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (37)

பார்முதலாய் நாதவரை முப்பா னாறாய்ப் பகர்கின்ற தத்துவங்க ளறிய வொண்ணாச், சீர்முதலா யகண்டைக்ய செல்வ மீந்த திருமாலே யருட்கடலே யக்ரா ரத்திற், பேர்முதலாய்க் கொப்புகந்த ராய வென்று பிண்டாண்டந் துதிக்கவளர் மலையி னுச்சி, நேர்முதலாய் விளங்கியிடர் தீர்க்கவென்று நிகழரியோ நமநாரா யண மெய்த்தேவே. (38)

அருந்தவத்தோ ருளம்பூத்த மலரே ஞான வமுதளிக்கு மாரமுதே யகண்ட மோன, விருந்தளிக்குந் தனித்தாயே யடிய னேனை மேனிலையி லேற்றியெனுட் கலந்த வாழ்வே, வருந்தலறக் கருணையினு லக்ரா ரத்தின் வரையமர்ந்தே கொப்புகத்த ராய னென்னு, நிரந்தரனே யடியரிடர் தீர்த் தேயாள நிகழரியோ நமநாரா யணமெய்த் தேவே. (39)

தருமனுஞ்செய் யாகமதி லக்ர பூசை தனைக்கொண்டு நித்யபிர்ம சாரியென்ன, வொருமையிலாச் சிசுபால தந்தவக்ர னுளம்பொருக்கா தவ மதிக்க வவரைக் கொன்றே, பெருமையுட னுயிர்களையுங் காத்த வண்ணம் பிறங்கவிலே யெழுந்தருளி யெம்மைக் காக்க, வருமைபெறு நின்னடி யார் சகித்திடாரோ யரிஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (40)

துடைவாழை மென்மடவா ரல்குற் பாம்பு தொடமயங்கி யறிவுதடு மாற்றங் கொண்டு, நடைவாய்ந்த பிணமெனப்பட் டார்க ளுன்றன் நளி னமலர்ச் சேவடியை நண்ணற் பாற்றூ, வுடைவாய்ந்த யன்பர்நிறை யக் ரா ரத்தி னுெங்கன்மிசைக் கொப்புசந்த ராயா வுன்று ளிடைவாய்ந்தா ரெவரெனினு முய்வ றன்றே யெழிலரியோ நமநாரா யணமெய்த் தேவே.

மூவாசை வலையிலகப் பட்டு மான்போன் முழிக்கின்றே னித்த ருண மென்முன் றூன்றிக், காவாது விடுவையெனிற் கதிவே றுண்டோ கருணைகட லாகிதிரு மலைமேல் வாழுந், தேவாகிக் கொப்புகந்த ராயா வுன்றன் சேவடியை நாடோருந் துதிக்கு நெஞ்சம், பாவாகி யுருகவுநின் மனந்தான் கல்லோ பகரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (42)

காமமெனுங் கொடும்பாவிப் பைய லென்னைக் கடும்பகையா லலைக் கழிக்கா முன்ன முன்ற, னுமமெனு மந்திரவா ளுதவி யாள்வாய் நலந்தி கழுங் காளிசெட்டி யக்ரா ரத்திற், பூமலிந்த மேருவுச்சி தனில மர்ந்த புண் ணியனே கொப்புகந்த ராயா சீர்சால், பூமகளுந் திருமகளு மருவி யென் றும் பொலியரியோ நமநாரா யணமெய்த் தேவே. (43)

குரோதமெனும் படுபாவித் துட்ட னென்னைக் குருகிமனங் குழம் புதல்செய் முனமி ரங்கி, விரோதியற வருட்படையுந் தந்து காப்பாய் மிளிர்காளி செட்டியக்கி ராரத் தோங்குந், தாராதத்தின் முடியமர்ந்தே கொப்பு கந்த தனிப்பொருளே யருட்கடலே சகஜா நந்த, நிராமயமே நிட் களங்க மாகி யென்று நிகழரியோ நமநாரா யணமெய்த் தேவே. (44)

உலோபமெனு மாபாவிக் கடைய னென்னை யுறவாடிக் கெடுக்கு முனம் வந்தெ னக்கு, விலோபமறு மருட்படையைத் தந்து காப்பாய் மிளிர்காளி செட்டியக்கி ராரத் தின்கண், கலாபநிலை மறைமுடிவி லமர்ந்த தேவே கருணையினுற் கொப்புகந்த ராயா ஞான, விலோசனந்தந் தாண் டருள்வ தென்றூ வையா விளங்கரியோ நமநாரா யணமெய்த்தேவே(45

மோகமெனும் படுமோசப் பைய்ய லென்னை முழுவஞ்சஞ் செய்யவவ னணுகா முன்னம், பாகமுட னருட்படையை யுதவி நாளும் பட்சமுட னெங்களையிங் கிருந்து காப்பாய்ச், சாகசமாய்க் காளிசெட்டி யக்ராரத்திற் றூணுமுடி கொப்புகந்த ராயா வென்னு, ளேகபரஞ் சுடராகி யுலகமெங்கு மிலகரியோ நமநாரா யணமெய்த் தேவே. (46)

மதமெனுமோர் மிருவஞ்சப் பைய்ய லென்னை மயக்கியிருட் குழியதனிற் றள்ளா முன்னுன், கதையெனுநல் லருடந்து காப்பா யையா கருணையினு லக்கிராரக் கிரியி னுச்சி, யுதயமென வளர்புற்று வடிவா யோங்கியுலகமெலாந் துதித்திடகொப் புகந்த ராயா, சததமெங்க ளிடரகற்றி யாள்வோமென்ற தனியரியோ நமநாரா யணமெய்த் தேவே. (47)

மாராமனமாச் சரியமெனும் பைய லென்றன் புத்திதனை மயக்கியரு நரகிற் றள்ள, வராமுனமே கருணையெனு சுதர்ச னத்தை வழங்கிடுவாய் காளிசெட்டி யக்ரா ரத்தின், கிராவமதிற் புற்றுருவா யெழுந்தமூர்த்தி கேசவதா மோதரஸ்ரீ வாசு தேவா, புராரியிடர் தீர்த்திட்ட முராரியென்னப் பொலியரியோ நமநாரா யணமெய்த் தேவே. (48)

பொறிகடரும் விடயசுகம் பொருளென் றுன்னிப் பூதலத்திற் றிரிந்தலையு நாயி னேனின், னெறிகடவா தருட்சுகத்தை மருவி நாளு நிலைத்திருக்க நின்கருணை யுளதோ வையா, அறிகைமிகு காளிசெட்டி யக்ராரத்தி னடுக்கன்மிசை யமர்ந்தபெரு மானே தாயாம், பொறிகலந்த மணிமார்பா வென்று நூல்கள் புகழரியோ நமநாரா யணமெய்த் தேவே. (49)

அஞ்ஞானப் பெருங்கடலி லழுந்தி நாளு மலைவுறுமிப் பேயேனையன்பு கொண்டு, மெஞ்ஞானக் கலமளித்துக் கடல்க டத்தி மேவரிதா முத்தியெனுங் கரையிற் சேர்த்து, விஞ்ஞானக் காளிசெட்டி யக்ரா ரத்தின் மேருவினி லொளிர்கமலக் கண்ணு வித்தப், பொய்ஞ்ஞால முணர்வகற்றியெனையாட் கொள்வாய்ப் புகழரியோ நமநாரா யணமெய்த் தேவே. (50)

மாதவகே சவபதும நாபா சீனி வாசரகு பதிமுகுந்த வாசு தேவா யாதவர்கள் குலதிலகா சக்ர பாணி வஞ்ஞானவிருளகற்றும் பாநு வேயென் போதவடி வாகியுமெய்ப் பொருளாய் நின்ற புண்ணியனே காளிசெட்டி யக்ரா ரத்தி, னீதவரு தாளவுநான் காண்ப தென்றோ நிகழரியோ நமநாரா யணமெய்த் தேவே. (51)

அச்சுதகோ விந்ததிரு வமர்ந்த மார்பா வசோதையுயிர்க் குயிராகி நின்ற கோவே, பச்சைவண்ண பரந்தாமா பாப நாசா பார்முழுது முண்டபெரு வாயா பைத்த, நச்சரவ முடிமீது நடன மாடு நாதாந்த மெய்ப்பொருளே நம்பி னோருக், குச்சிதநற் சுகமளிக்கக் கிரிய மர்ந்தே யொளிரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (52)

கார்நிறத்தோய் மலர்க்கமலக் கண்ணா வென்றுங் கருடனையு மூர்தி யெனக் கொண்ட மாலே, சீர்நிறைந்த காளிசெட்டி யக்ரா ரத்தின் றிகிரி முடி புற்றுருவாய் நின்ற மூர்த்தி, யார்நினையிங் குணர்ந்திடுவார் மறைக ளோது மனந்தகலி யாணகுணப் பொருளே நின்றன், பேர்நினைக்க வினை யகல்வ துண்மை யென்று பிறங்கரியோ நமநாரா யணமெய்த்தேவே 53)

சந்தனம சோகமகிற் பனசந் தேமா தருக்கள்பல வானளவி யோங் கிநிற்க, மந்திகளும் பழம்பரிக்கத்தாவுமாங்கே வாழ்ந்திடுங்கற் கடகமதைக் கண்டிழிந்து, சிந்தையுநைந் துருகவளர் திகிரி மீது தேவாதி தேவனென வெவரும் போற்ற, வந்திலகு மருட்கடலே வினைக டீர்ப்பாய் வளரரியோ நமநாரா யணமெய்த் தேவே.

அமரரிடர் தீர்த்தமுத மாரி பெய்த வாநிபரஞ் சோதியனே வகண் டமூர்த்தி, சமர்புரியும் பார்த்தனிட தேர்ந டத்துஞ் சாரதியா யமர்ந்துல கைக் காத்த வண்ணங், கமலநிறை வாவிகட்சூழ்ந் திலங்கு கின்ற காளி செட்டி யக்கிராரப் பொருப்பில் வாழும், விமலவெம திடாகற்றி யாள்வா யெங்கு மிளிரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (55)

கரியமுகில் வண்ணனென்ன வுலக மெல்லாங் காப்பதுவே தொழி லாகப் பெற்றாய் ஞானப், பிரியமுறு காளிசெட்டி யக்ரா ரத்தின் பிறங்க லிலே தொப்புகந்த ராய னென்னு, மரியபெயர் தனைப்பூண்டிங் கெங்க ளைத்தா னுதரிக்கச் சம்மதித்த வரசேயாதுர், தெரியலரா மேழைகளைக் காப்பா யெங்குந் திகழரியோ நமநாரா யணமெய்த் தேவே. (56)

வேதமெனும் பறையறைவர் பிராம ணர்கள் விண்ணவர்கள் மலர் மாரி சொரிவர் திங்க, ளாதவர்கள் வலம்புரிவ ரிஞ்ஞர் சூழ்வ ரட்டதிக்குப் பாலகர்க ளிறைஞ்சி நிற்பர், காதலொடு வரம்பையர்க ணடனஞ் செய்வர் காளிசெட்டி யக்ரார வோங்கன் மீதே, போதமுற மாதவர்கள் பாடி யரட்ப் பொலியரியோ நமநாரா யணமெய்த் தேவே. (57)

பத்தர்களுன் புகழ்பாடி வணங்கி சித்ரப் பதுமையெனப் பரவசங் கொண் டிருக்க வன்னோர், சித்தமல மறுத்தவரைத் தடுத்தாட் கொள்ளத் திகழ்காளி செட்டியக்கி ராரத் தின்க, ணத்திரியிற் புற்றுருவாய்ச் சினக ரங்கொண் டமர்ந்திலகும் பெருமானே யடிய னேற்கு, முத்திசுக மளித்தி டுநா ளுளதோ வையா முரஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (58)

ஆயர்மனை புகுந்துகளை வாடி வெண்ணை யருந்திமகிழ்ந் தசோதை தனக் ககிலங் காட்டு, மாயவசெங் கனிவாயா கமலக் கண்ணா மணிவண்ணா மலர்மங்கை யொளிரு மார்பா, நேயருள மகலாத நிஷ்க ளங்க நித்தியசித் சுகசொரூப மலைமேல் வாழுந், தாயனையா யுயிர்கள்வினை யகற்றி யாள்வாய்த் தகையரியோ நமநாரா யணமெய்த் தேவே. (59)

தஞ்சமென வந்தடைந்த வன்பர் துன்பந் தவிர்ப்பனெனவபயஸ்தந் தந்தெந் நாளும், பஞ்சமிலாக் காளிசெட்டி யக்ரா ரத்திற் பருப்பதத்தின் மீதமர்ந்த பச்சை வண்ணா, கஞ்சனைமுன் னதஞ்செய்து தேவர் துன்பங் களையகற்றி யாண்டவண மடிய னேனை, யஞ்சலெனக் காத்திடுநா ளுள தோ வையா யரிஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (60)

சத்தியஞா னனந்தச் சபையு மோங்கித் தழைத்திடுநற் காளிசெட்டி யக்ரா ரஞ்சேர், குத்திரத்திற் புற்றுருவாய்ச் சினக ரத்தைக் கொண்டரு ளும் பெருமானே துளப மார்பா, சித்தஜனைப் பெற்றபரந் தாமா ஞான தேசிகனே மலமகற்றி யடிய னேற்கு, நித்தியவாழ் வளித்திடுநா ளுளதோ வெங்கு நிறையரியோ நமநாரா யணமெய்த் தேவே. (61)

கோடிரவி யெனவிளங்குங் கொண்டல் வண்ணா கோவிந்தா வை குந்தா முகுந்தா வென்று, பாடியுனைப் பணிகின்ற பத்த ருள்ளம் பதைப்ப டக்கிப் பரமசுகந் தந்து காக்க, வாடகஞ்சேர் காளிசெட்டி யக்ரா ரத்தி னசலமுடி மீதமர்ந்த வமல வாழ்வே, நாடியுனை வந்தடைந்த னென்னைக் காப்பாய் நரஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (62)

கற்றவர்கள் புகழநிதம் வளர்ந்தி ருக்குங் காளிசெட்டி யக்ராரக் கிரிய மர்ந்து, குற்றமற வுயிர்களையிங் காள்வோ மென்று கொப்புகந்த ராய னெனும் பெயரு ளானே, முற்றுலகுந் துதிக்கவளர் கமலக் கண்ணா மூத றிஞ ரேத்தவள ரறிவா னந்தம்,பெற்றிடச்செய் புண்ணியனே யெம்மைக் காக்கப் பிறங்கரியோ நமநாரா யணமெய்த் தேவே. (63)

அட்டாக்க ரப்பொருளாய் நின்ற தேவா யகிலவுயி ருட்புறம்பு மான கோவே, வொட்டாரைச் சங்கரித்தே யன்பர் தம்மை யுகந்தருளாற் றடுத் தாண்ட தசாவ தாரா, இட்டார்வாழ் காளிசெட்டி யக்ரா ரத்தி னேந்த லிலே வாழ்கின்ற கமலக் கண்ணா, கட்டாய மாகவுநீ யாள்வ தென்றோ கனஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (64)

உத்தமர்க ளுளத்தகலா வொளியே யிந்த வுலகமெலா நிறைந்திலகும் பொருளே தேடும், புத்தமுதே யடியரிடர் தீர்க்க வந்த புண்ணியனே மறை யனந்தம் புகழு மோன, தத்துவனே கருணையினா லக்ரா ரத்தின் சாரலி லே யமர்ந்தபெரு மானே யெந்தஞ், சித்தமல மறுத்தருளை யீந்தா ளையா ஸ்ரீஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (65)

பரதனுல காண்டிடப்பா துகையை யீந்து படர்ந்தவன மேகிமுனி வரரைக் காத்த, வரதவேங் கடராய கமல நாபா வாசுகியாற் கடல்கடைந்த வாதி மூர்த்தி, யரவணைமேற் பள்ளிகொளு மரசே யென்று மழகாருங் காளிசெட்டி யக்ரா ரத்தின், வரையமர்ந்திங் குயிர்கடமைக் காக்க வோங்கி வளரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (66)

நாசமிலாப் பேரின்பச் செல்வ ரான நல்லடியா ருளத்தென்று நடஞ்செய் கோவே, தேசுறுநற் காளிசெட்டி யக்ரா ரத்தின் றிகிரிமுடி யெழுந்தபெரு மானே பந்த, பாசமறுத் தெனையாளக் கருணை கூர்வாய்ப் பரமபத வாசவுன தருளைப் பெற்றே, பூசுரர்கள் பல்லாண்டு கூறி நிற்க பொலியரியோ நமநாரா யணமெய்த் தேவே. (67)

அரனுமைசுப் பிரமணிய மாமு கத்த ராதியவர் குடும்பமெலா மடிமை கொண்ட, செருக்குடைபா ணாசுரன்றன் சிரத்தைக் கொய்து சிவன் முதலா னவர்களையுங் காத்த வண்ணம், பெருமைபெரு காளிசெட்டி யக்ரா ரத்தின் பிறங்கன்மிசை யெழுந்தபெரு மானே யெங்கள், சிரமமதைத் தீர்த்தடிமை கொள்வ தென்றோ ஸ்ரீஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (68)

உனதுதிரு நாமமதைக் காதி னாலே யொருபோதுங் கொள்ளசகியா விரதம் பூண்டுங், தனதுசெவி தனின்மணியைக் கட்டிக் கொண்டுஞ் சுததமுனை மறவாத கண்டா கூரன், றனையுனது கருணையினான் முடிவிலாண்ட தாசரதே யெங்களைநீ யாள்வ தென்றோ, வனமலியுங் காளிசெட்டி யக்ரா ரத்தில் வளரரியோ நமநாரா யணமெய்த்தேவே. (69)

என்றும்பதி னாறுவய தாகி யோங்கு மியலுறுமார்க் கண்டனுக்காய் மறலி தன்னை, யன்றுதைத்த சிவனையுமை பணிந்து போற்றி யனைத்துயிர்க்கு மெனக்குமித மளிக்கத் தக்க, பொன்றலறு மனுவருள்வாய் காதா வென்னப் புராரிநவிற் றாரகமெய்ப் பொருளாங் கோவே, நின்றனருள் ளடியருற வாக்கி யாள்வாய் நிகழரியோ நமநாரா யணமெய்த் தேவே.

சாதமறி யாதவளா யசோதை தானுந் தன்மகனென் றெண்ணியுரலதனிற் கட்டித், தூரிதமுட னவநீதந் திருடி யுண்ணிற் சுகுணனினை யடிப்பனெனப் பயமு றுத்த, மருதமா மிரண்டினையும் விழவே தள்ளி மணிக்ரீவ னளகூபன் சாப நீக்கிப் பரிதலுட னவர்களையிங் காண்ட கோவே பகரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (71)

உனதுதிரு நாமமதி லொன்றுஞ் சொல்லா னுன்னடியார்க் கொருபோதும் வணக்கஞ் செய்யான், தனையுணர்ந்த பெரியோர்சொல் சற்றுங் கேளான் சந்ததம்பொய் களவாதி செய்வன் றீய. வினையுடையான் றிருவரங்கத் தரிசி யென்று விற்றதனா லவனையுன் தருளி னாண்டா, யெனையதுபோ லாளவுநின் கருணை யென்றோ வியலரியோ நமநாரா யணமெய்த் தேவே. (72)

கானிலொரு தாசர்வழிச் செல்லும் போது கள்ளன்வரக் கண்டுள்ளங் கலங்க வேறோர், கானவன்விற் பிடித்துவரக் கண்ட கள்ளன் கானிலொளித் திட தாசர் கலக்கந் தீர்ந்த, யீனமறு புண்ணியத்தால் வேடன் றன்னை யின்பமுற வைகுந்தஞ் சேர்த்த வண்ணம், வானவரெங் களையாளக் கிரியினுச்சி வளரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (73)

தாயாகித் தந்தையுமாய்க் குருவு மாகித் தமயனுமாய்த் தம்பியு மாய்த் தார மாகிச், சேயாகிச் செல்வமுமாய் நானா வாகச் செப்புகின்ற சரா சரமாஞ் சகந்தா னாகி, நீயாகி நானாகி நிற்பை யாகி நின்னையார் கண்டு தொழ வல்லா ரையா, மாயாத வரமளிக்கக் கிரியி னுச்சி வளரரியோ நம நாரா யணமெய்த் தேவே. (74)

ஆயர்மனை புகுந்துகளவாடி வெண்ணை யருந்தியபோ திடையர் பிடிக்ககப்ப டாது, நேயமுடன் றதிபாண்ட வன்ற னில்லி னீள்சாடி புகுந்தவற்குக் கண்ண ளித்த, நாயகநின் சொரூபத்தைக் கண்ட வன்றே னசியாத கதியடைந்தா னன்றோ வவ்வா, னாயகமே பரமபத மளித்திங் காள்வாய் தகையரியோ நமநாரா யணமெய்த் தேவே. (75)

மறைநான்கு மோதியவிப் பிரரா னாலு மன்னவர்கள் வைசியர்சூத் திரரா னாலும், பொறையின்மி லேச்சசண்டா ளருமா னாலும் புடவியதி லெவரேனு மையா வுன்றா, னிறைமனதாய்த் துதிப்பரெனி லவருக் கேதா னீங்காத பேரின்ப முத்தி தந்தே, குறையகற்றி யாள்வனெனக் கிரிமேல் வாழுங் கோனரியோ நமநார யணமெய்த் தேவே. (76)

பகர்பிரக லாதனநா ரதரும் பஞ்ச பாண்டவருந் துரோபதைகௌ தமன்றன் றேவி, நிகரில்விபீ டணனாதி மற்றை யோரு நினக்கென்ன பரிதானங் கொடுக்கப் பெற்றாய்ப், புகழுமவர் தமையாண்ட பெருமா னேயிப் பூதலத்தி லெனையாளத் தடுப்பா ருண்டோ, வகளங்க னாகிநக மீதில் வாழு மரிஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (77)

மாதங்க மத்தகத்தை நாடுஞ் சிங்க மண்ணெளிக்கு மூஷிகத்தை கண்ணு மோதா,னேதுபற்ப மகரந்த நுகருந் தும்பி யொருபோது நெரிஞ் சிமலர் சூழா வாறுன், பாதமலர்க் கீர்த்தனத்தைப் பஜிப்போன் றானும் பலதெய்வம் பஜிக்கறியான் பண்பின் மிக்க, மாதவர்சூ ழக்ராரப் பருப்ப தத்தில் வளரறியோ நமநாரா யணமெய்த் தேவே. (78)

மெய்யறியாப் பொய்யுருற வாகி நாளு மேதினியிற் றிரிந்தலையு நாயி னேனுக், குய்யுநெறி தனைக்காட்டி வினைய கற்றி வுமதுதிரு வடிப் பத்தி யுளத்தி ருத்தி, கையினெல்லிக் கனிபோலுஞ் சுகம ளித்தாய்க் காளிசெட்டி யக்ராரப் பொகுட்ட மர்ந்த, வையவுனை யறியவலா ரிலதா யோங்கு மரிஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (79)

அன்னையினு மரியபெருங் கருணையூட்டு மாரமுதே யென்னுயிரே யமல வாழ்வே, தன்னையளித் தருளுருவா யென்னை யாண்ட தயாபரனே யகிலமெலா நிறைந்த கோவே, வுன்னைநினைந் துருகுமனக் கோயிற் கொண்ட வுணருருவே யக்ராரப் பொகுட்டி லென்று, மன்னுபெரு மானேயிங் குயிரைக் காக்க வளரரியோ நமநாரா யணமெய்த் தேவே (80)

**வ**ன்கொடுமை மனத்தினனா யலைவே னுக்கு மனமகற்றி வாழ்ந்திருக்க வருள்செய் யாயே, லென்கொடுமை யென்பாவ மென்ன வென்பே னெவர்க்குரைப்பே னெங்குறுவே னின்று ளன்றிப், புன்கணறு நெறியறியே னக்ரா ரத்தின் பூதாத்தி லமர்ந்தபெரு மானே ஞான, நன்குணர்ந்த வடியருளம் பொலிந்து வாழு நரஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (81)

**க**ெருடன்முது கேறியுல கெவையுங் காப்பாய்க் கேவலா னந்தநிதியாகி யன்பர், மருடவிர்த்திங் காளுதற்கா யக்ரா ரத்தின் வரையமர்ந்தபெருமானே யனுமா னுக்கே, யிருடவிர்த்து மெஞ்ஞான பானு வென்ன விலங்குசுக மளித்தபெருந் தகையே யென்றன், கருதவிர்த்தாண் டிடமனந்தா னுளதோ வையா கருதரியோ நமநாரா யணமெய்த் தேவே. (82)

**சீ**தைநவி ராகயோ கத்திற் சித்தந் தெளியாமற் றியங்குமனு மந்தனுக்குப், போதகனாய்ச் சகஜாம னஸ்க யோகம் போதித்தே யாண்டரகுராமா வன்பர், வேதனைக டீர்த்தருள வக்ராரத்தின் மேருதனி லமர்ந்தபெரு மானே ஞான, சாதனையில் லாதவெனை யாள்வ தென்றோ தயவரியோ நமநாரா யணமெய்த் தேவே. (83)

**மி**ன்னவிருஞ் செம்பொன்மணி மாட கூட மேவியநற் காளிசெட்டி யக்ரா ரத்தி, னன்னர்முகி லுலவுகிரி யமர்ந்தே நாளு நாதாந்த நடனமிடும் பெருமானே யென், னின்னலற வருள்செயுநா ளுளதோ விந்த வேழைதனக் கிறங்கிலையேற் காப்ப தார்கா, ணன்னியனோ வுன்னடிமை யலனோ வையா வரிஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (84)

**த**த்துவங்க ளறியவொணா ததீத மோன தத்துவமே யுலகெவைக்குஞ் சாட்சி யான, நித்தியமே நிராமயமே சுயம்பா யோங்கு நெடுமாலே யன்பருள நீங்கா வாழ்வே, யெத்திசையும் போற்றவள ரக்ரா ரத்தி னேந்தலிலே வளர்ந்தபெரு மானே யென்றன், சித்தமல மறுத்தருளிற் சேர்த்தா ளாயோ ஸ்ரீஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (85)

**அ**னித்தியபுன் புலையுடலை நானென் றெண்ணி யகங்காரப் படுகூபத் தழுந்தி நாளுந், தொனித்திடுமூ வாசையெனுங் கன்மேன் மூட சுதந்தரநின் திருநாமந் துதியாப் பாவி, தனித்திலகு நின்னடியார்க் கடிய னாக்கித் தாமரைத்தா ளென்முடியிற் சூட்டி யென்றுஞ், சனித்தலற வமுதளித்திங் காள்வ தென்றோ சயவரியோ நமநாரா யணமெய்த் தேவே. (86)

**ம**த்தேறி யுடைதயிர்போன் மாயவாழ்வின் மயக்கேறிச் சுழலுமனங் கொண்டு நாளும், பித்தேறிக் காற்றிலலை துரும்பு போன்று பேயேறி மெலிகின்ற பேதை யேனை, செத்தேறு கட்டையினில் வைக்கா முன்னந் திருவருடந் தடியருற வாக்கி யாள்வா, யொத்தேறி யுயிர்க்குயிரா யோங்கித் தானா யொளிரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (87)

எள்ளேறுந் தைலமென வுலக மெல்லா மிடையறவே நிறைந்த பெரு வெளியே யன்ப, ருள்ளேறி யானந்த நடஞ்செய் தென்று மூல வாமெய் வாழ்வளிக்கு முறவே யூறுங் கள்ளேறு மலர்த்தடஞ்சூ ழக்ரா ரத்தின் கல்லகத்தில் வாழு மலர்க் கண்ணா செய்ய, புள்ளேறி வந்தெனை யிங் காள்வா யெங்கும் பொலியரியோ நமநாரா யணமெய்த் தேவே. (88)

மட்பாண்ட நோக்குமவன் மண்ணா காமன் மண்ணைவைக்கும் விலக்ஷணமா யிருக்கு மாபோற், சட்பாவ விகாரவடி வாகி நின்ற தத்துவங்க டமையறிவோ னீவே றென்றே, யுட்பார்வை யருளியெனைத் தடுத்தாட் கொண்ட வுத்தமனை காளிசெட்டி யக்ரா ரத்தி, னட்பாகச் சைலமிசை யமர்ந்து வாழு நரஹரியோ நமநாரா யணமெய்த் தேவே. (89)

இந்திரிய மொன்றடக்கின் மற்றொன் றேதா னீர்க்குமிதி லையமிலை யடங்கா நாக, மைந்தலையி லொன்றறுக்க மற்றொன் றால மார்பரித்துச் சிந்தியிடு மாத லாலே, சிந்தைமிட றறவொருங்கே சிதையு மென்றே தெளிவித்திங் கெனையாள வக்ரா ரத்தின், விந்தமதி லெழுந்த பெரு மானே யெங்கு மிளிரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (90)

மட்டறவே யோடுமனந் தனைப்பி டித்து மன்னுயிர்மை வாகமெனுந் தாணு தன்னிற், கட்டுதல்வீ டதைவிடுத்தற் கட்டா மென்றே கருணையுட னருள்புரிந்திங் கக்ரா ரத்தி, லிட்டமுட னேந்தலிலே யமர்த்த வாழ்வே யிதுசமயம் வீடளிப்பாய் நிருவி கற்ப, நிட்டைபெறு மடியருள நீங்கா தோங்கி நிகழரியோ நமநாரா யணமெய்த் தேவே. (91)

பந்தறைய வறையவது கிளம்பி மேலே பாய்வதுபோன் மனமடக்க வடங்கா தாகி, மந்தியென விடயசுக மருவ வோடி மலங்குமதை நிருவிகற்ப சமாதி தன்னிற், பந்தனைசெய் திடவுமன மடியு மென்றே பரிவினருள் புரிந்தக்கி ராரத் தோங்கு, விந்தமதி லமர்ந்தபெரு மானே யெங்கும் விளங்கரியோ நமநாரா யணமெய்த் தேவே. (92)

விண்கொடுத்த தேவர்களு முனிவர் சித்தர் மேதையர்மா னிடர்பலரு மதித்துக் காணா, தெண்கொடுக்கா தெங்குமுறை யெம்பி ரானே யிதுதருணங் காப்பதற்கு வருவாய்ஞ் ஞானக், கண்கொடுத்த கற்பகமே யதீத வாழ்விற் கலந்ததுவா யிருக்கவுநீ கடைக்கண் பாராய், மண்கொடுத்த மலைமுடிமே லிடர்க ளீர்க்க வளரரியோ நமநாரா யணமெய்த் தேவே.

புற்றோங்கு மரவணைமேற் பள்ளி கொண்டு பொறியையுரத் தணிந்தபெரு மானே மாயை, யுற்றோங்கு கொடியமனக் கள்வ னேனை யுளங் கொண்டிங் கடிமைகொள லுனக்கே யொக்குங், கற்றோங்கு முணர்வறியேன் மறைந விற்றுங் கருத்தறியே னெனினுமெனை யாள்வாய் செல்வம், பெற்றோங்கு மக்ரார மலையி னோங்கி பிறங்கரியோ நமநாரா யணமெய்த் தேவே. (94)

பூதமுதற் பொறிபுலனும் பிராண னைந்தும் புந்திகர ணாதிகளி யலநா னென்னும், போதமுமீ யலவென்றே யனைத்தும் போக்கிப் பூர ணசிற் சோதிமய நீயே யென்றிங், காதரத்தோ டெனையாண்டு கொண்ட வண்ண மார்த்தருறை காளிசெட்டி யக்ரா ரத்தின், பூதரத்தி லமர்ந்துயிர்க ளிடரகற்றப் பொலியரியோ நமநாரா யணமெய்த் தேவே. (95)

மனமொருத்தன் வசமாகி லவனை நாளும் வருத்துகின்ற பிறப்பிறப்புச் சாரா தாகு, மனமொருத்தன் வயமாகா தோடு மாகில் வன்பிறவிச் சுழலிலகப் பட்டு நிற்பான், மனமறுதன் முத்தியென வுணர்த்தி நாளும் வரதனென வக்ராரத் திகிரி தன்னின், மனமகிழ்வி னமர்ந்துயிர்கள் பிணியகற்ற வளரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (96)

விழைவொடுபல் விடயசுக மருவி நாளும் வீண்கலகம் போக்கியவ னெனினு மென்றன், பிழைசிறிதும் குறிக்காமற் கனவி னூடு பேரின்ப வாழ்வளித்தே கருவிற் புக்கு, மிழிவகற்றி யாண்டதுபோ லன்பா சூழ, வெழிலறுநற் காளிசெட்டி யக்ரா ரத்தார் செழுமைபெறக் கடைக்கண்பார்த் தாள்வாய் கோவே திகழரியோ நமநாரா யணமெய்த் தேவே(97

அமரேந்தி ராதியரும் போற்று நின்ற னடிதொழுதோர் முத்திசுக மடைந்தி ருக்க, விமலாநா னொருத்தனுமெ பவபந் தத்தின் மெலிந்திடுத னின்னருட்கிங் கியல்ப தாமோ, இமைப்போது நின்னடியை மறந்த துண்டோ வியன்முத்தி யளித்திடுவா யக்ரா ரத்தி, லமைவோடு மசலமதி லமர்ந்த கோவே யரிஹரியோ நமநாரா யணமெய்த் தேவே (98)

ஆழ்வார்கள் பன்னிருவர் துதிக்கும் பாத மடியன்முடிக் கணிகலமா யிருத்தி மோன, வாழ்வாகு முத்தியெனுங் கரையிற் சேர்த்து மாயவனே மணிவண்ணா வுணர்வில் லானை, தாழ்வான சனனசா கரத்திற் றானே யாழாமற் றடுத்தாள்வா யக்ரா ரத்திற், பேழ்வாகப் பொருப்பதனி லமர்ந்தெஞ் ஞான்றும் பிறங்கரியோ நமநாரா யணமெய்த் தேவே. (99)

வாங்கவெளி யோடனிலந் தடுக்கா தென்று மனமடங்க பேரின்ப வாரி யாகி, நீங்கலிலா தயிக்கபத முதவி யாள்வாய் நிச்சலமா நிறைகின்ற நிமல வாழ்வே, தேங்கலெலாந் தீர்ந்துதவந் தாணு யோங்கித் திகழ்கின்ற காளிசெட்டி யக்ரா ரத்தி, னோங்கலிலே யொளிர்கின்ற வொளியே யெங்கு மொளிரரியோ நமநாரா யணமெய்த் தேவே. (100)

## வேறு.

வளர்தரு மக்ரா ரத்தார் வாழிமா தவரும் வாழி
மிளிர்திரு மங்கை வாழி விளங்குசங் காழி வாழி
கிளர்திரு மலையம் வாழி கேட்டவர் படித்தோர் வாழி
யொளிர்தரு திருமால் வாழி யுலகெலாம் வாழி வாழி.

175921

உ
பரப்பிரஹ்மணேநம:

திருக்காளிசெட்டி யக்ராரத்திற் கடுத்திருக்குந் திருமலைமேற்
றிருக்கோயில்கொண் டெழுந்தருளியிராநின்ற

## ஸ்ரீ ஒப்புக்கொண்ட பெருமாள்பேரில்

காஞ்சீபுரம் சுவாமி சொரூபாநந்த மணி பாடிய கீர்த்தனாநந்த லஹரி.

### நேரிசை வெண்பா.

கங்கைசூழ் காளிசெட்டிக் கண்ணகரைக் காப்பமென
விங்கிதமா யொப்புக்கொண் டின்பருளஞ்—செங்கணன்மேற்
பண்ணாருங் கீர்த்தனம்யான் பாடநிதம் விஞ்ஞானக்
கண்ணா சடகோபா கா.

### சடகோபாழ்வார் தோத்திரம்

இராகம் - சங்கராபரணம் தாளம் - ஆதி.

(பிராணநாத பிராந ப்ரோவவே)

பல்லவி.

தேவதேவமா தேசிகா காவாய்

அனுபல்லவி.

ஆவலற்றோ ருளத் தமர்சட கோபா
வாதிபராபர மாகுஞ்சிற் சொரூபா (தேவ)

சரணம்.

செந்நெற் கன்னல்வளர் சீரார்திருக் காளி
செட்டி யக்ராரம்வாழ் செல்வருள மேவி
பன்னுமா ரமுதைப் பரிந்தளித்து
பாலனைச் சொரூ பாநந்தத்திற் சேர்த்து (தேவ)

### ஸ்ரீ ஒப்புக்கொண்ட பெருமாள் கீர்த்தனை.

1. இராகம் - கல்யாணி. தாளம் - ரூபகம்.

(தேவி மீனாக்ஷி)

பல்லவி.

ஞானஸாம் ராஜ்யபதி நாயேற் கருளித்திதி

அநுபல்லவி.

வானவர்தொழு மாமணியே மாசொன்றில்லாக் கனியே
தீனனேனைத் தீவிரத்திற் றெருளாகச் செயணியே
நானெனுமகந்தை நீங்கிட நண்ணுமோனஞ் சேர்ந்தோங்கிட
தானவர்நாளு நின்றேங்கிட தாஸனுக்குன் னருடாங்கிட (ஞா)

சரணம்.

கருணைபொழியுந் திருவே காளிசெட்டியூர் குருவே
தருணத்தி லருண்மருவே தற்பர வுருவே
வருபிறப்பினி கெடும்யோசனை மைந்தனேனுக் குறையீசனே
சரணம்புரிந்தேன் பிரகாசனே சாமளவர் ணவிலாசனே

கருடனுதி துதிபாடிட
கழலடிகளென் முடிசூடிட
சொரூபாநந்தத்தை நாடிட
தொந்தாதியற் றருள்கூடிட (ஞா)

2. இராகம் - தர்ப்பார் - தாளம் - ஜம்பை.
(போய்வருவேன் ஐயா நான்)

பல்லவி.

மாதவனே மாமலைவாழ் மாதவனே

அநுபல்லவி.

வேதா சுகபோத வருடாதா குண நீதா வெழின் (மாத)

சரணங்கள்.

(1) ஆங்கார மற்றவர்க் காரத வாநந்த
மளிப்பவ னேயரு ளாளா வென்று
மோங்கார சாக்ஷியா யுள்ளும் புறம்போங்கு
முத்தம னேமலர்த் தாளா

தீங்கனைத்துந் தீர்ப்பவனே
திருவடிக்கீழ் சேர்ப்பவனே
யெங்குமெனைக் காப்பவனே
யேழைபணி யேற்பவனே (மாத)

(2) அஞ்சலிப்போர்களை யாதரித் தாட்கொள
வன்பாயொப்புக்கொண்ட நேசா நாளும்
பஞ்சடி யிந்திரை பண்பாயென் றும்போற்றும்
பங்கயக்கண் பவ நாசா

நெஞ்சகத்துன் னினைவறியே
னிற்குணனே யான்சிறியேன்
வஞ்சகமே கொள்வெறியேன்
வணங்குலவும் வாழ்வறியேன் (மாத)

(3) மங்களஞ் சேர்திரு வக்ராரத் தில்வாழு
மாதவர்கட்கனு கூலா நினை
சங்கையறத்தொழுக் தற்சொரூபன் றனைத்
தன்மயனுக்குங்குண சீலா
வெங்கும்பரி பூரணனே
யின்பருளு நாரணனே
தங்கும்புகழ் காரணனே
தனையனைக்கா வாரணனே (மாத)

3-வது இராகம் - பைரவி அட - தாளம்.

(இாருவீர ரணதீர)

பல்லவி.

தப்பாதன்பார் தம்மையாளத் தானுயொப்புக் கொண்ட ராயா

அநுபல்லவி.

இப்பாரினி லிணையொன்றில்லா
தின்பமளித் திலங்குந் தூயா (தப்)

சரணங்கள்.

(1) திருமகள் போற்றிடுந் தெய்யவநன் மணியே
தெருளக்கி ராரம்வாழ் திவ்வியபொற் பணியே
கருவகற்றியென் கவலை நீக்கி
கருணாரஸ சொரூபனுக்க (தப்)

(2) சாதன நான்குற்ற ஸர்ஜன லோலனே
பூதலத்தோர் போற்றும் புண்ணிய சீலனே
தீதகலவிச் சிறியேற் கீசா
போதமருட் பூரணோலாசா (தப்)

(3) புத்தர்தரும் போதா வித்தர்தருந் தாதா
நித்தர்தா நின்றன் சித்தர் திரும்பாதா
பத்திசெய் வார்க்கருட் பரமாநந்த
சுத்தாத்வித சொரூபாநந்தா (தப்)

4-வது இராகம் - தோடி தாளம் - ஆதி.

(சங்கரிமாம் பாலயா ஸ்ரீ)

பல்லவி.

அருண்மயஞ்சே ரன்பர்தம்மை
யாளவொப்புக்கொண்ட ராயா

சரணங்கள்.

(1) தெருண்மயஞ்சே ரக்ராரம்வாழ்
திருமலை யோங்குங்
கருணாலயா களிக்திக்காலங்
காலபாசங் கழல கண்பா (ரரு)

(2) பெண்ணொருத்திக் கொப்புக்கொண்டு
பிரியாமலாண்ட
கண்ணாநின்செங் கழற்ப ணிந்தேன்
கருத்தைத்திருத்தி யாளவாரா (யரு)

(3) சொரூபாநந்தன் சொன்மாலையைச்
சூடுஞ் சுந்தரா
கருப்பாயாத கதியளித்தாட்
காளிசெட்டி நகர்விலாசா (அரு)

5-வது இராகம் - இந்துஸ்தானி காபி தாளம் - ஏகம்.
(ஆண்டெனக்கன் பீந்த நாதா)

பல்லவி.

பூரணானந்த சுபோதா நின் பொன்னடி தந்தருள் பிரக்யாதா.

(1) காரணசாரியங் காட்டியெனையாண்ட
நாரணாநின்னை நாளுமுளங்கொண்டேன் (பூர)

(2) கற்பகச்சோலைசூழ் காளிநகர்வாசா
கற்பனை யிற்றிட காத்தருளு லாசா (பூர)

(3) சிற்சொருபாநந்தஞ் சேயர்க்களித் தாளாய்
விற்பன்ன ருள்ளோங்கி விளங்குமணித்தாளா (பூர)

6-வது இராகம் - செஞ்சுருட்டி தாளம் ஏகம்.

(அள்ளியள்ளி நீர்குடிக்கும்)

செந்நெற்கன்னற் சேர்ந்தொளிரு
திருக்காளி யக்ராரஞ்
சேர்ந்தோங்க வந்தசீலனே கோபாலனே
சேயனுள்வாழும் லோலனே யினி
சின்னஞ்சிறுவனைச் சின்மயனாக்கிடாய்
சித்தத்துளன்பினைச் சீக்கிரந் தேங்கிடாய் (செந்)

(2) பத்தபரி பாலகனாய் பார்முதலாண்டிடும்
பண்பாரும் பாஞ்சஜன்யனே மிருகண்யனே
பருப்பதத்தோங்கும் புண்பனே நினை
பத்திசெய்தறியாப் பாலனைக்காத்திடாய்
பரமபதத்தோங்க பரிவுடன் சேர்த்திடாய் (செந்)

(3) உத்தமர்களுள் ளொளிரு மோங்காரவாசனே
யோதாதுணர்த்து மீசனே யருணேசனே
யுட்புறம் வாழுலாசனே சதா
சிற்சொரூபாநந்த செல்வனையாண்டவா
சித்திமுத்தியரு டிருமலைத் தாண்டவா (செக்)

7-வது இந்துஸ்தான் காபி தாளம் - ரூபகம்.

(செலிமணக்யாலவாணி)

(1) செக்திருவை யுரமணைத்து திருமலைவாழ் லோலனே
திருமலைவாழ் லோலனே திருக்குருவாஞ் சீலனே (செக்)

(2) மந்தஹாஸ வதனோலாஸா மருளொழிக்க வாருமே
மருளொழிக்க வாருமே மறைமுடியைத் தாருமே (செக்)

(3) உத்தமரையாளவென்று மொப்புக்கொண்ட ராயனே
யொப்புக்கொண்ட ராயனே யோங்காரத்தில்வாழ்த் தூயனே

(4) அக்ராரஞ்சே ரன்பர்மன வாலயம்வாழ்த் தூயனே
யாலயம்வாழ்த் தூயனே யசலத்தோங்கு மாயனே (செக்)

(5) சுகசொரூபாநந்தமுற சுதனைக் கண்ணுற் பாருமே
சுதனைக்கண்ணுற் பாருமே சுத்தாத்விதத்திற் சேருமே(செ

8-வது இராகம் - ஆபேரி தாளம் ரூபகம்.

(நகுமோமு கனலேனி)

பல்லவி.

திருக்காணி நகர்மேவும் ஸ்ரீதாமோ தரனே

திருவார்க்தொளிர் மார்பா சின்மய சொரூபா

அநுபல்லவி.

மருடீர்ந்த மனத்தினர் மகிதலத்திலென்று
மகிழ்வாய்த் துதிக்க மலைமேல்வளரும் கனியே
மாசிலா மணியே (திரு)

சரணங்கள்.

(1) காணுதி யுடன்கூடிக் காலத்தைவீண் போக்கி
மாணுதி யறியாது மாதரன்பிற் றேக்கி
புராணநின் னடிபோற்றுப் புலையேன்றனை நோக்கி
யருணு டதனை மகிழ்வாயளித்தாற் குறையோ
வமலனே முறையோ (திரு)

(2) குறையொடு வருமஹா குணாதீத மோன
குசேலன்கை யவற்கொண்டு குலக்கொடி சுகதாமா
நிறைசெல்வம் பெறச்செய்த நீலமேகச்யாமா
நிபுணமணியெ நின் தன்பருளா லினியா
னெறிபெற் றெளிர (திரு)

(3) அலர்மீது வளர்ந்தோங்கு மமலமா மங்கை
பலகாலும் பணிந்தேத்தும் பாதபத்மந்தன்னை
மலைவற மாதவா மந்தன்முடிக் கேற்றி
வளராமுதாஞ் சொரூபானந்தத்தை மகிழ்வாய்
வரதாநீ தருவாய் (திரு)

9—வது இராகம் - காம்போதி தாளம் - ஆதி.

ஓ ர டி.

பல்லவி.

சிற்பதத்தில்வாழும் ஸ்ரீதரா
சின்மயானந்த திருவாளரேத்தும் பாதாரா

சரணம்.

கற்பகனே கற்பகத்தீங்கனியே கனிரசனே
சிற்சொலித மாயொளிருந் திவ்யப்பிரகாசனே
திருக்காருந்தெள் ளமுமே செந்தேனே
திருக்காளியூரிற் றிகழும் பெருமானே
பேதையென் னிதயமலர் மீதிற்பிறங்குஞ் சததினகரனே
மாதவர்க்கனு தினமும் வாழவரமதையருளுங் கரனே
பேதமற்றிட பேரின்ப நிலையினி
னீதனின் றிரு வடிகளிற்சேர்ந்துள் ளாறி
சித்தமயலற்று சதா சித்தஜயம் பெற்றிடவே
சித்தநிலயத்தில்வள ரத்தா வருட்புரிய
இத்தனை தாமத மேற்காது யீசா
வித்தநியிற் காவாய் தப்பாது வெனை
சத்தியனே வினை சாராது சதா
வந்துவித முற முப்போது மாளாய்
சுத்தபராநந்தனே சுகிக்கவினி வாராது
சும்மாவிருந் திடில்யான் றுயர்பட முடியாது
சீர்மிகுந்திட சேர்ந்துநல் லின்பத்தை
தீரனீதா சேயனுன் பெற்று
விண்ணுளரேத்துஞ்செங் கண்ணுளா வன்புடன்
றண்ணரும் விற்பனு சோகமிஞ்சுதே
தாகவிடாய் நீ தீர்த்திடாய்
நித்தமுமசிபதத்தி நிலையறிந் ததுவாகச்
சத்தமறத் திகழ்மோன சமாதிவைச் சுகபோகா
தருணமிதே பரிவாய்க் கருணையுடன் றருவாய்

துஷ்டமத மெட்டுஞ்சதா விட்டவர்கள் கிட்டும் பாதா
வமலஞானமதை யருளவேயென் றொப்புக்கொண்ட
கமலபாதமதைக் கருத்தினிற் கொண்டுவங்க
லிங்கமாகு மன்பரை யாண்டநின் னெழிலன்பு
பொங்கிடுஞ் சிற்சொரூபன் போற்றும் புனிதனை (சிற்)

## 10-வது (செங்கின்மாநகர்)

செஞ்சொன்யா மலர்த் தேறலாறோடுஞ் சீர்
திருக்காளியக்ரார நாத னென் றுந்
தினகரனை யோங்கும் வேத னெழிற்
செஞ்சரோருகச் செல்வன் போற்றிடுஞ்
செந்திருவடி சென்னி சேர்த்தருட்
செம்பஞ்சூட்டிய சேவடி யிந்திரா
சித்தத்தினிக்கும் ப்ரக்யாத னென்றன்
சித்தத்திரு ணீக்கும் போதன்.
2. மஞ்சுலாந்தருக் கட்பலவோங்கி வாழ்
மாவளஞ்சூழ் குன்றில் வாஸ னென்று
மாசகற்றுஞானோ லாஸன் சதா
மந்தஹாஸங்கொண் மங்களாகரன்
மைந்தன் மாசிர மோங்கு பாஸ்கரன்
வஞ்சகலோபர் நெஞ்சினிற் காணாத
மாதவனை மருணேச னென் னுண்
மாணிக்கமா யோங்குந் தேசன்.
3. பஞ்சப்பாழ் புலக் கள்வரா நாளுமே
பந்தத்துள் ளாழ்ந்திடுந் தீயன் கொடும்
பாவைய ரான்மாயும் பேய னிதம்
பஞ்சுபோன்மட நெஞ்ச மோடிமா
வஞ்சமே மித மிஞ்சியே புரி
பஞ்ச பாதகன் பாரிற்கெடா வண்ணம்
பக்ஷமாயாள் சிதாகாயனென்னைப்
பரமனந்த மாக்குந் தூயன்.
4. நெஞ்சமே யிட மாகக்கொண் டார்தம்மை
நீள்பவ நீக்கியா ளோலன் பின்னு
நித்திய னாக்குங் கோபாலன் றன்னை
நிந்தித் தோரையுஞ் சொந்தமாயரு
ணிற்விகாரனை நின்மலாகர
ணிற்குணானந்தந் தேக்குங் கோலாகல
னிச்சலனை மனுகூல னென்னை
நிஜசொருப னாக்குஞ் சீலன்.

திருமலைவாஸன் திருவடி வாழ்க.

சம்பூர்ணம்.

சென்னை-600 008
12521